# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் நவம்பர் மாத அவசரக்கூட்டம் 15.11.2018–ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது .

தனி அலுவலர் / ஆணையாளர்

**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்கு, நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS-2/2018 நாள் 12.11.2018 –ன் படி, Fecal Sludge and Septage Management திட்டத்தின் கீழ், Fecal Sludge Treatment Plant (FSTP) அமைப்பதற்கு ரூ.548.35 இலட்சம் திட்டநிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திட்டநிதி ஒதுக்கீட்டு விவரம் பின்வருமாறு,

| FSTP Capacity in KLD | Project cost (Rs.in Lakh) | IUDM GoTN share 2018-19 | IUDM GoTN share 2019-20 | SBM GoI share 32% |
|---|---|---|---|---|
| 40 | 548.35 | 183.70 | 183.70 | 180.96 |

மேற்காணும் விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண் 566–1/2018/இ1

**தீர்மானம் எண்.1943 அஙகீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.2**

இந்நகராட்சியில், தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2018–19–ன் கீழ், ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள சாலைப்பணிகளுக்கு 16.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அன்றைய தினம் அவற்றின் தொழில் நுட்ப உறை திறக்கப்பட்டு Evauation செய்யப்பட்டதில், மூன்று ஒப்பந்ததாரர்களும் தகுதி பெற்றுள்ளதை தொடர்ந்து 02.11.2018 அன்று Price Bid திறக்கப்பட்டது. அதன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் ஆத்திமூடு, கருங்கல் அஞ்சல் | மதிப்பீட்டை விட 0.03 %அதிகம் |
| 2 | திரு.D.ஜெஸ்டின் சுந்தரசிங 6–49B,ஆத்திமூடு, மண்டைக்காடு | மதிப்பீட்டை விட 12.03 %அதிகம் |
| 3 | திரு.Y.ஜெயசிங 33,V.V.N காலனி, இருளப்பபுரம், கோட்டார் | மதிப்பீட்டை விட 12.55 %குறைவு |

மேற்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.Y.ஜெயசிங ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 12.55% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று Letter of Acceptance (LOA) வழஙக மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண். 650/2018/ இ1

**தீர்மானம் எண்.1944 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.3**

இந்நகராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–19–ன் கீழ், வார்டு எண்.13–ல் மீனவர் ஓய்வறை கட்டுதல் பணியினை ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, 12.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 3.97 %அதிகம் |
| 2. | திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 4.14 %அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதத்தில் அளிக்கப்பட்டதால், விலை விகிதத்தை குறைத்து தர கேட்டு கடிதம் (Negotiation letter) அனுப்பப்பட்டதில், திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் விலைவிகிதத்தை குறைக்க இயலாது எனவும், திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.01% குறைத்து பணி செய்ய சம்மதம் தெரிவித்ததை தொடர்ந்து, திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண். 1081 /2018/இ1

**தீர்மானம் எண்.1945 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.4**

இந்நகராட்சி கணிணி பிரிவில் பயன்பாட்டிலுள்ள 5KVA மற்றும் 3 KVA UPS –களின் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) முறையே 02.11.2018 மற்றும் 05.11.2018–ல் முடிவடைந்துவிட்டதால், மேலும் ஓராண்டுக்கு ஒப்பந்தத்தை புதுப்பித்தற்காக மேற்படி UPS களின் உற்பத்தி நிறுவனமானNovateur Electrical & Digital Systems pvt ltd. நிறுவனத்திலிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி UPS களின் வருடாந்திர பராமரிப்புக் காலத்தை தொடர்ந்து ஓராண்டுக்கு முறையே 03.11.2018 முதல் 02.11.2019 மற்றும் 06.11.2018 முதல் 05.11.2019 வரையும் கீழ்காணும் கட்டணத்தின்படி நீட்டிப்பு செய்வதற்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அங்கீகராத்திற்கு வைக்கப்படுகிறது.

1. 5 KVA UPS 03.11.2018 - 02.11.2019 ரூ.8850
2. 3 KVA UPS 06.11.2018 - 05.11.2019 ரூ.6490

மொத்தம் 15340

ந.க.எண். 3562 /2007/AP

**தீர்மானம் எண்.1946 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.5**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரை பகுதியில் செயல்பட்டு வருகின்ற காருண்யா நர்சரி மற்றும் பிறைமறி பள்ளிக்கூடம் மாணவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்து WP.NO:15603/2018–ன் படி திரு.ஜாண்பீட்டர் என்பவர் நகராட்சி ஆணையாளர் குளச்சல் மற்றும் 9 பேர்களுக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் தொடரப்பட்டிருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதினை தொடர்ந்து இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு.ஆதிமூல பாண்டியன் என்பவர் வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/– வழஙகக் கேட்டுக் கொண்டுள்ளார். எனவே, வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/– அன்னாருக்கு வழஙகுவதற்கு மன்றத்தின் அஙகீகாரத்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

ந.க.எண்.813/2018/TPI

**தீர்மானம் எண்.1947 அஙகீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.6**

குளச்சல் நகராட்சி முதல் நிலை நகராட்சியாக தற்போது செயல்பட்டு வருகிறது. அரசாணை நிலை எண்.101 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழஙகல் துறை நாள்:30.04.1997 –ன் படியும், மக்கள் தொகை கணக்கீட்டின் படியும், 100 சுகாதார பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். தற்போது இந்நகராட்சியில் இரண்டாம் நிலை நகராட்சியாக இருந்த நிலையில் ஒப்புதல் தரப்பட்டுள்ள 50 சுகாதார பணியாளர்களில் தற்போது 36 பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர், 14 பணியிடஙகள் நிரப்பப்பட வேண்டியுள்ளது.

பார்வை இரண்டில் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, குளச்சல் நகராட்சிக்கு 45 சுகாதார பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து கொள்ள அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதில் தற்போது 30 பணியாளர்கள் மட்டும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகின்றனர். தற்போது உள்ள சுகாதார பணிகளின் வேலைப் பழுவை சமாளிக்க இந்நகராட்சியில் சுகாதார பணியாளர்கள் போதுமான அளவு இல்லை. எனவே, பார்வை ஒன்றில் காணும் அரசாணையின் படி, தற்போது உள்ள நிரந்தர பணியாளர்கள் 36 மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் 30 ஆக மொத்தம் 66 பணியாளர்கள் போக (100–66 = 34) இன்னும் 34 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு வைக்க மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண். 212 /2018/எச்1

**தீர்மானம் எண்.1948 அஙகீகரிக்கப்பட்டன**
**பொருள் எண்.7**

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2018–19–ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34, அறிவிப்பு எண்.14–ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் வழங்கல் மையங்கள் (Automatic Water Vending Centre) நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்பதிற்கிணங்க, குளச்சல் நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் தேர்வு செய்யப்பட்டுள்ள 24 இடஙகளில் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் ஆழ்துளைக் கிணற்று நீர் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலிருந்து செல்லும் பிரதான மற்றும் பகிர்மான குழாய் நீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர் சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும்

செலவினத் தொகை தலா ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் வீதம் மொத்தம் 24 இடங்களில் ரூ.432.00 மட்டும் (ரூபாய் நானூற்று முப்பத்து இரண்டு இலட்சம் மட்டும் ) ஆகும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்கவும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, குளச்சல் நகராட்சியில் உள்ள **24 வார்டுகளில் தேர்வு செய்யப்பட்டுள்ள 24 இடங்களில்** தானியங்கும் குடிநீர் வழங்கல் மையங்கள் (Automatic Water Vending Centres) தனியார் தொழில் நிறுவனங்கள், தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், மேலும் அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவத்தினை தேர்வு செய்ய ஏதுவாக அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் " **Expression of Interest**" விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் கீழ்காணும் இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

| **Sl.No** | **Name of the Municipality** | **Total no.of wards** | **No.of centres proposed** | **Name of the Location** | **Wards covered** | **Remarks** |
|---|---|---|---|---|---|---|
| 1 | Colachel | 24 | 24 | Telephone Exchange road near veterinary hospita | 1 | All wards covered |
| 2 | | | | Pottal near CMC sanitary quarters | 2 | |
| 3 | | | | Asarimar street near sintex | 3 | |
| 4 | | | | K.S.S.S near community Hall | 4 | |
| 5 | | | | Kottilpadu near last bridge | 5 | |
| 6 | | | | Kottilpadu near burial ground | 6 | |
| 7 | | | | Kottilpadu near church | 7 | |
| 8 | | | | Marmady near Kurusady | 8 | |
| 9 | | | | Maramady Near Arputham Store | 9 | |
| 10 | | | | Opp. Indian Bank near Urban Health Centre | 10 | |
| 11 | | | | Port street opp. St.Kanikkai Matha church | 11 | |
| 12 | | | | Port Street near New Harbour entrance | 12 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13 | | | | Port street No.1 near Kurusady | 13 | |
| 14 | | | | Port Street No.1 backside of old School | 14 | |
| 15 | | | | Matha Colony near OHT | 15 | |
| 16 | | | | Bus Stand | 16 | |
| 17 | | | | Narikkal Nagaraja Temple | 17 | |
| 18 | | | | Mohidheen Palli near sintex | 18 | |
| 19 | | | | Nesavalar Street near church | 19 | |
| 20 | | | | Anna ststue near stage | 20 | |
| 21 | | | | Elappavilai near sintex | 21 | |
| 22 | | | | Near Pallivasal Junction | 22 | |
| 23 | | | | Velliyakulam Junction | 23 | |
| 24 | | | | Sasthankarai (opp.Municipal land) | 24 | |

எனவே, குளச்சல் நகராட்சி 24 வார்டுகளில் தேர்வு செய்யப்பட்டுள்ள 24 இடஙகளில் தானியஙகும் குடிநீர் வழங்கல் மையஙகளைரூ.432.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் செயல்படுத்தும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து அனுமதி பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1477/2018/இ1

**தீர்மானம் எண்.1949 அஙகீகரிக்கப்பட்டன**

ஆணையாளர்/தனி அலுவலர்
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் நவம்பர் மாத சாதாரணக்கூட்டம் 30.11.2018–ம் தேதி ஆண்டு வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது .

தனி அலுவலர் / ஆணையாளர்

### பொருள் எண்.1

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகள், கவியரசு கண்ணதாசன் வணிகவளாக கடைகள், காமராஜர் பேருந்து நிலைய கடைகள், நவீன மீன்சந்தை கடைகள், டாக்டர் அம்பேத்கார் தேநீர் கடை ஆகியவற்றிற்கு 14.11.2018–ல் பொது ஏலம் நடைபெற்று ஏல விபரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி (மாதம் 1–க்கு) | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலத்தாரர் பெயர் |
|---|---|---|---|
| **கலைஞர் கருணாநிதி வணிகவளாகம் தரை தளம் கடை எண்.22** | | | |
| 1 | I.அப்துல் றகீம் | 3500/– | |
| 2 | தாஹீர் உசேன் | 3600/– | 3600/– தாஹீர் உசேன் |
| **தரைதளம் கடை எண்.26** | | | |
| 1 | I.அப்துல் றகீம் | 3600/– | 3600/– I.அப்துல் றகீம் |
| 2 | M.சித்திக் | 3500/– | |
| 3 | I.அப்துல் அஜீஸ் | 3400/– | |
| **தரைதளம் கடை எண்.27** | | | |
| 1 | R.ஜாண் | 3600/– | 3600/– R.ஜாண் |
| 2 | I.அப்துல் அஜீஸ் | 3500/– | |
| **தரைதளம் கடை எண்.28** | | | |
| | M.சித்திக் | 3600/– | 3600/– M.சித்திக் |
| | R.ஜாண் | 3500/– | |
| **தரைதளம் கடை எண்.30** | | | |
| 1 | I.அப்துல் அஜீஸ் | 3600/– | 3600/– I.அப்துல் அஜீஸ் |
| 2 | தாஹீர் உசேன் | 3500/– | |
| **கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்.12** | | | |
| 1 | M.ரெகுபாலன் | 5200/– | 5200/– M.ரெகுபாலன் |
| 2 | D.ஜெஸி ஜெனட் | 5100/– | |

மேற்காணும் கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. மேற்படி கடைகளில் கலம் 4–ல் கொடுக்கப்பட்டுள்ள ஏலத்தாரர்கள் ஏலக்கேள்வி கேட்டுள்ளதால் அதனை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும் காமராஜர் பேருந்து நிலையத்தின் கடை எண்கள் 17,18,22 முதல் 27,36 முதல் 39 கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்.32, நவீன மீன் சந்தை கடை எண்கள் 34 ஆகிய கடைகளுக்கு முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் எவரும் சேராததாலும், டாக்டர் அம்பேத்கார் தேநீர் கடைக்கு முன்னர் செலுத்திய வாடகை விட ஏலக்கேள்வி குறைவாக (6500 ) இருப்பதாலும் மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.1950 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/3585/2018 நாள் 17.11.20189–ன் படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத திட்டம் 2018–19–ன் கீழ், ரூ.7.80 இலட்சம் மதிப்பீட்டில், கீழ்க்காணும் பணிகளை செயல்படுத்துவதற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குளச்சல் நகராட்சி – பழைய துறைமுகம் பாலத்தின் அருகாமையில் Solar Mini High Mass (10 m) அமைத்தல் | 3.90 |
| 2 | குளச்சல் நகராட்சி – சி.எஸ்.ஐ ஆலயம் முன் பகுதியில் Solar Mini High Mass (10 m) அமைத்தல் | 3.90 |
| | மொத்தம் | 7.80 |

மேற்காணும் விவரஙகள் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1494/2018/இ1

**தீர்மானம் எண்.1951 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.3**

குளச்சல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஜி.பிரின்ஸ் அவர்களின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19–ன் கீழ், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் செயல்முறைகள் ந.க.எண்.ஆ3/3585/2018 நாள் 17.11.2018–ன் படி, இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 பாலத்தன்கரை பகுதியில் 2 எண்ணம் ஆழ்துளை கிணறு அமைத்தல் பணியினை ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண். 1553 /2018/இ1

**தீர்மானம் எண்.1952 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.4**

இந்நகராட்சியிலுள்ள கணினிகள் மற்றும் பிரிண்டர்களின் AMC காலம் முடிவடைந்துவிட்டபடியாலும், அலுவலகம் பணிகள் தொயிவின்றி செயல்பட அவசியம் கருதி கீழே கண்டுள்ளபடி இரண்டு கணிணிகள் பழுது பார்த்ததற்கு அலுவலக பொது நிதியிலிருந்து ரூ.6700/– வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | விபரம் | ரசீது எண் | தொகை ரூ | தொகை வழஙகப்பட வேண்டிய நிறுவனம் |
|---|---|---|---|---|
| 1 | Mother Board, RAMX 5mps | CRD 1905 | 4700 | ACT Automation |
| 2 | Cabiner & Fan | CRD 2234 | 1050 | ACT Automation |
| 3 | Smps & Service Charges | 3558 | 950 | ACT Automation |
| | | **Total** | 6700 | |

AP/544/2006

**தீர்மானம் எண்.1953 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.5**

குழித்துறை ஆறு கூட்டு குடிநீர் திட்டதிலிருந்து குளச்சல் நகராட்சிக்கு குடிநீர் வழஙகும் பொருட்டு மேற்படி திட்டத்திலிருந்து நாள் ஒன்றிற்கு 6 இலட்சம் லிட்டர் குடிநீரை பெறுவதற்கு, ஆலஞ்சி கிராமத்திலிருந்து குளச்சல் வரை குடிநீர் குழாய்களை நீட்டித்து குடிநீர் வழஙக கேட்டு மன்றத் தீர்மானம் எண்.1843, நாள் 27.06.2018–ன் படி, மன்ற ஒப்புதல் பெறப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (RWS Division) நாகர்கோவில் அலுவலகம் மூலம் ரூ.56.06 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், 3rd **Empowered Committee for Capital Grant Fund and O&M Gap Filling Fund 2018-19-ன் 01.10.2018** –ஆம் தேதிய கூட்ட நடவடிக்கையில், குழித்துறை ஆறு இணைப்பு குடிநீர் வழஙகும் திட்டத்தை குளச்சல் வரை விரிவாக்கம் செய்வதற்கு கீழ்காணும் விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Sl. No | Name of the ULB | Sector | Amount (Rs.in Lakh) | Proposed Grant | Grant to be allotted in 2018-19 | Reason for works taken up |
|---|---|---|---|---|---|---|
| 1 | Colachel | WSIS | 53.08 | 53.08 | 53.08 | Extending Kuzhithuraiyar CWSS due to intrusion of salt in borewells during Tsunami |

மேற்படி விவரம் மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேலும், குழித்துறை ஆறு இணைப்பு குடிநீர் வழஙகும் திட்டத்திலிருந்து குளச்சல் நகராட்சிக்கு குடிநீர் வழஙக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் அனுமதி பெறுவதற்கும், மேற்காணும் ரூ.53.08 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழஙக கேட்டும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண். 870–1 /2018/இ1

**தீர்மானம் எண்.1954 அஙகீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.6**

இந்நகராட்சி பகுதிகளுக்கு 21 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலிருந்து பெறப்படும் குடிநீர், 10 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் மின் மோட்டார்கள் மூலம் ஏற்றப்பட்டு, ஒருநாள் விட்டு ஒருநாள் சீரான முறையில் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது வறட்சியினை சமாளிக்கும் பொருட்டும் கூடுதலாக 2 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் மின் தடை காலஙகளில் நான்கு ஜெனரேட்டர்கள் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர் வினியோக பிரிவிற்கு ஒரு மின்பணியாளர் நிலை–II பணியிடம் மட்டும் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிலையில், வால்வுகளை இயக்குவதற்கும், மின் மோட்டார்கள், ஜெனரேட்டர்களை இயக்குவதற்கும், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை சுத்தம் செய்வதற்கும் பணியிடஙகள் எதுவும் தோற்றுவிக்கப்படாததால், மேற்படி பணிகளை மேற்கொள்ள சுகாதார பிரிவில் இருந்து 7 பணியாளர்கள் மற்றும் 4 ஒப்பந்த பணியாளர்கள் குடிநீர் வினியோக பணியில் ஈடுபடுத்தி, குடிநீர் வினியோகப்பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆனால், மேற்காணும் 7 மாற்றுப் பணியாளர்களை கொண்டு, குடிநீர் வினியோகப் பணிகளை மேற்கொள்வதில் சில சிரமஙகள் ஏற்பட்டு வருகிறது. மேலும், இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடஙகில், தூய்மை இந்தியா இயக்கம் – சிறப்பு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ், ரூ.178.00 இலட்சம் மதிப்பீட்டில் உரக்கிடஙகு மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டு, திடக்கழிவு மேலாண்மை பணிகள் முழுமையாக செயல்படுத்தப்பட உள்ளதால், குப்பைகளை தரம் பிரிப்பதற்கு கூடுதல் துப்புரவு பணியாளர்கள் தேவைப்படும் நிலையில், குடிநீர் வினியோகப் பிரிவில் மாற்றுப் பணியில் உள்ள துப்புரவு பணியாளர்களை பொது சுகாதாரப் பணிகளுக்கு அனுப்பும் நிலை உள்ளது. இதனால் பொது சுகாதாரப் பணிகளில் தொய்வு ஏற்படும் நிலை தவிர்க்கப்படும்.

எனவே, இந்நகராட்சி குடிநீர் வினியோகப் பணிகளுக்கு தேவையான 10 பணியாளர்களை Outsourcing மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையருக்கு முன் மொழிவு சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1694/2018/இ2

**தீர்மானம் எண்.1955  அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.7**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாரர் திரு.சி.செல்லநாடார் என்பவருக்கு வழஙகப்பட வேண்டிய 1% & 5 % முன்வைப்புத் தொகைகள் ரூ.41950/– ஐ காலஙகடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உள்ளதால் மேற்படி தொகைகள் திரும்ப வழஙக இந்நகர்மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண். 1955 /2018/பி1

**தீர்மானம் எண்.1956  அங்கீகரிக்கப்பட்டன**

ஆணையாளர்/தனி அலுவலர்
குளச்சல் நகராட்சி